# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.
Prosecution witness for P.W.20 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. சீதாலெட்சுமி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.2026.

A1 absent. 317 Crpc petition filed. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.11.2019 அன்று திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதே துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்தபோது முதல்நிலை காவலரான அ.சா.18 காளிமுத்து என்பவரின் பிரேதத்தை ஆய்வாளரின் வேண்டுகோள் கடித்துடன் பிரேத பரிசோதனைக்காக பிற்பகல் 3.10 மணியளவில் கொண்டு வந்தார். நான் மாலை 4 மணியளவில் பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன். பிரேதத்தில் பிணவிறைப்புத் தன்மை உடல் முழுவதும் பரவிக் காணப்பட்டது. பிரேதம் சீரான உடல்வாகு கொண்டதாக காணப்பட்டது. கை, கால் நகங்கள் வெளிறி காணப்பட்டது. பிரேதத்தில் கீழ்க்கண்ட இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் இருந்தன.

1. 15 செமீ நீளமுள்ள தையலிடப்பட்ட காயம் தொப்புளுக்கு 0.5 செமீ மேலிருந்து நெஞ்சுப் பகுதியின் அடிப்பகுதி வரை நீண்டு காணப்பட்டது.

2. சாய்வான தையலிடப்பட்ட 3 செமீ நீளமுள்ள காயம் வலது மார்புக்கு அடிப்பகுதியில் காணப்பட்டது. அந்த காயம் காயம்எண் 1ற்கு 2.5 செமீக்கு

வலதுபுறமாகவும், வலது காரை எலும்பின் உட்பகுதியிலிருந்து 15 செமீக்கு கீழாகவும், வலது நெஞ்சுப் பகுதியின் முளையிலிருந்து 9 செமீக்கு உட்புறமாகவும் காணப்பட்டது. தையல்களை உருவி பார்க்கும்போது 4x0.5cm அளவுள்ள குத்துக்காயம் 6 வது மற்றும் 7 வது வலதுபுற விலா எலும்புகளுக்கு நடுவே இருந்த இடைவெளி வழியாக கல்லீரலின் வலபுறம் 4x0.5cm அளவில் முன்பகுதி வழியாக நுழைந்து 3x0.5cm அளவில் கல்லீரல் வெளியே பின்பகுதி வரை இருந்தது. வயிற்று பகுதியில் முன் சிறுகுடல் அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டும், இரைப்பையின் அடிப்பகுதியும், பின்பகுதி சிறுகுடலும் 10 தையல்களினால் இணைக்கப்பட்டிருந்தது. உள்ளுறுப்புகள் இயல்பாகவும், குறுக்கு வெட்டுத் தோற்றத்தில் வெளிரியும் காணப்பட்டது. மூளை நீர்கோர்த்துக் கொண்டும் அது வெளிறியும் காணப்பட்டது. இரைப்பை காலியாகவும், அதில் எவ்வித வாடையும் இல்லாமலும், அதன் உட்புறதோல் வெளிறியும் காணப்பட்டது. குடலில் 20 மிலி பித்தநீர் எவ்வித வாடையும் இல்லாமல் இருந்தது. அதன் உட்புறத்தோல் வெளிறி காணப்பட்டது. மேற்படி நபர் எனது பிரேத பரிசோதனைக்கு முன்பாக 6 முதல் 24 மணி நேரத்திற்குள் இறந்திருக்கலாம் என்றும், மேற்படி நபர் வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட குத்துக்காயத்தின் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும் என்றும் கருத்து தெரிவித்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ 16**. அதில் நான் இறுதி கருத்துரையும் வழங்கியுள்ளேன். மேற்படி காயங்கள் கத்தி போன்ற கூர்மையான ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புண்டு. மேற்படி காயங்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால் காயத்தின் தன்மை மாறுபடுவதால் எந்த ஆயுதத்தால் மேற்படி காயங்கள் ஏற்பட்டது என்பதை அறுதியிட்டு சொல்லமுடியாது. அ.சா.ஆ 16 ல் சொல்லப்பட்டுள்ள

குத்துக்காயங்கள் கத்தி போன்ற கூர்மையான ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.01.19 18:39:07 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.
Prosecution witness for P.W.21 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. முத்துவீரப்பன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.2026.

A1 absent. 317 Crpc petition filed. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடி மத்திய பாக காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு ஏரல் காவல்நிலையத்தில் பயிற்சி உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 13.11.2019 அன்று 22.30 மணியளவில் நான் ரோந்து பணியில் இருக்கும்போது நிலையத்திலிருந்து கொடுத்த தகவலின் அடிப்படையில் நான் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த இறந்துபோன காளிமுத்து, அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் காயத் தகவலைப் பெற்று மேற்படி நால்வரையும் விசாரித்தபோது அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து நிலையம் வந்து 14.11.2019 அன்று அதிகாலை 1.30 மணியளவில் நிலைய குற்ற எண் 211/2019 இதச 147, 148, 294(பி), 323, 324, 427, 307, 506(2) பிரிவுகள் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 17**. அதை புகார் வாக்குமூலத்துடன் ஸ்ரீவைகுண்டம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பினேன். நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், ஆய்வாளருக்கும் கொடுத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1, 2, 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 17 ல் எழுதப்பட்ட வாசகங்களுக்கும், அ.சா1 ன் கையொப்பத்திற்கும் மை வித்தியாசப்படுகிறது என்றால் சரியல்ல. அதில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட வாசகங்கள் வேறு மையால் எழுதப்பட்டுள்ளது. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எனக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும், நான் மேற்படி மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும், அ.சா.1 னிடம் வாக்குமூலமும் தயார் செய்யவில்லை என்றும், அ.சா.1 னிடம் வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டு பின்யோசனையின்பேரில் ஆய்வாளரின் ஆலோசனையின்படி அதை பூர்த்தி செய்துகொண்டோம் என்றும் சொன்னால் சரியல்ல.

4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 17 ல் புகார் வாக்குமூலம் தயார் செய்யப்பட்ட நேரம் 13.11.2019 அன்று 23 முதல் 24 மணிக்குள் பதிவு செய்யப்பட்டதாக கண்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை 14.11.2019 அன்று அதிகாலை 1.30 மணியளவில் பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை யார் மூலம் எத்தனை மணிக்கு அனுப்பப்பட்டது என்று அதில் குறிப்பிடப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையை எத்தனை மணிக்கு யார் மூலம் அனுப்பினேன் என்றால் ஞாபகமில்லை. நான் நான்கு பேரையும் விசாரித்தேன். நான்குபேரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அ.சா.1 னிடம் மட்டும் புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்ற மூவரிடமும் புகார் வாக்குமூலம் பதிவு செய்யாமல் அ.சா.1 னிடம் மட்டும் புகார் வாக்குமூலம் பதிவு செய்ததற்கு குறிப்பிட்ட காரணம் இல்லை. புகார் வாக்குமூலத்தில் அ.சா.2 ஐ மூன்று பேர் கம்பால் மாறி மாறி தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது

என்றால் சரிதான். அ.சா.ஆ 17 ல் 13.11.2019 என்று பதிவு செய்யப்பட்ட தேதி என் கையொப்பத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 14.11.2019 அன்றுதான் நான் வாக்குமூலம் பதிவு செய்து 13.11.2019 அன்று பதிவு செய்ததாக கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்பதால்தான் மேற்படி முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.01.19 18:39:17 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.